# அவுஸ்திரேலியா

# தமிழ்மொழித் தேர்வு

**Reading Time: 15 Minutes**
**Writing Time: 90 Minutes**

# வளர்நிலை 3

## அரை ஆண்டுத் தேர்வு
## 2006

சுட்டெண் **(Index) :**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

தமிழ் மொழி

அரையாண்டுத் தேர்வு வகுப்பு 03 15-07-2006

பன்முகதேர்வு வினாக்கள் பகுதி 1 வருடம்: 03

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | நான் ---------- ஆடுகிறேன்.<br>பாட்டு 2. நடனம் 3. நாடகம் 4. இசை | 1 | 2 | 3 | 4 |
| 2 | அவர்கள் கோயிலுக்குப் -----------.<br>1.போனேன் 2.போகிறார்கள். 3.போகிறோம்.<br>4. போனான். | 1 | 2 | 3 | 4 |
| 3 | அவர் மகனுக்குப் பாடம் -----------------.<br>கற்பித்தார். 2. சிரித்தார் 3. அழுதார். 4. எழுதினார். | 1 | 2 | 3 | 4 |
| 4 | ரோசா பூ இனிய ----------- உடையது.<br>1.நிறம் 2. வாசனை 3. மனம் 4. குணம் | 1 | 2 | 3 | 4 |
| 5 | ---------- ஒருநாளும் மறக்க வேண்டாம்<br>1. தந்தை 2. தம்பியை 3. மாதாவை 4. மாமா | 1 | 2 | 3 | 4 |
| 6 | வெறுப்பின் எதிர்ச்சொல் -------------.<br>1. விருப்பு 2. பிரிவு 3. ஆசை 4. தனிமை | 1 | 2 | 3 | 4 |
| 7 | அரசனின் எதிர்ப்பால் சொல் --------------.<br>1. தங்கை 2. அம்மா 3. அரசி 4. நடிகை | 1 | 2 | 3 | 4 |
| 8 | அவன் பாட்டுப் பாடுகிறான். நாங்கள் பாட்டுப்<br>1.பாடினேன். 2. பாடுகிறோம். 3.பாடுவேன் 4.பாடுகிறான். | 1 | 2 | 3 | 4 |
| 9. | பாலில் இருந்து ------------- எடுக்கப்படும்.<br>1. தண்ணீர் 2. மோர் 3. நீர் 4. பானம் | 1 | 2 | 3 | 4 |
| 10. | குரு என்பது.<br>1. மாதா 2. தந்தை 3. தம்பி 4. ஆசிரியர் | 1 | 2 | 3 | 4 |
| 11. | அறம் செய விரும்பு என்று கூறியவர் ------.<br>1. வள்ளுவர் 2. பாரதியார்<br>3. ஔவையார் 4. ஆதித்தனார் | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12. | எண்ணும் --------- கண் எனத் தகும்.<br>1. இலக்கம் 2. கல்வி 3. எழுத்தும் 4. அழகு | 1 | 2 | 3 | 4 |
| 13. | அவர்கள் ------------ அன்பாகப் பேசினார்கள்<br>என்னுடன் 2. என்னில் 3. எனக்கு 4. என்னால் | 1 | 2 | 3 | 4 |
| 14. | மறைதல் என்பதன் எதிர்ச்சொல்<br>1. மறைவு 2. உதிப்பு 3. இறப்பு 4.தோன்றுதல் | 1 | 2 | 3 | 4 |
| 15 | தேவி கணிதத்தில் **அதிக புள்ளிகள் பெற்றாள்.**<br>அவள் தோழி ----- புள்ளிகள் பெற்றாள்.<br>1.குறைய 2. நிறைய 3. தோல்வி 4. பதில் | 1 | 2 | 3 | 4 |
| 16 | ------------ கதைப் புத்தகம் படிக்கிறோம்.<br>1. நாங்கள் 2. நான் 3. நாம் 4. அவர்கள் | 1 | 2 | 3 | 4 |
| 17. | அந்தப் புத்தகம் கீழே ------------.<br>1.விழுந்தன 2. விழுந்தது 3. ஓடியது. 4. சென்றன. | 1 | 2 | 3 | 4 |
| 18. | தமிழில் 247 எழுத்துக்கள் ----------<br>1.புதிய 2. இல்லை 3. இனிமை 4. உண்டு | 1 | 2 | 3 | 4 |
| 19. | சிறுவனின் எதிர்பால் சொல்<br>1. தலைவி 2. சிறுமி 3. மாணவி 4. பாடகி | 1 | 2 | 3 | 4 |
| 20. | பேரூந்து பல பிரயாணிகளுடன் --------------- ஓடும்.<br>1. தரையில் 2. நீரில் 3. வானத்தில் 4. காற்றில் | 1 | 2 | 3 | 4 |
| 21 | ஈஸ்டர் திருநாள் வரும் மாதம் ------------ ஆகும்.<br>1. தை 2. சித்திரை 3. ஆவணி 4. மார்கழி | 1 | 2 | 3 | 4 |
| 22 | ஒரு -------------- வையாதே பாப்பா<br>1. படி 2. குழந்தையை, 3. நட 4. விளையாடு | 1 | 2 | 3 | 4 |
| 23 | எங்கள் வீட்டின்கூரையில் பல பறவைகள் வந்து --------<br>1. தங்கினார். 2. தங்கினாள். 3.தங்கின<br>4. தங்கினான். | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24 | இன்கலை பிரித்து எழுதினால்<br>1. இன் + கலை 2. இனிய + கலை<br>3. இனி + கலை 4. இ + கலை | 1 | 2 | 3 | 4 |
| 25 | சாம் அந்தப் --------------- வெற்றி பெற்றான்<br>1. போட்டியை 2. போட்டிக்கு<br>3. போட்டியில் 4. போட்டியால் | 1 | 2 | 3 | 4 |
| 26 | ஐம்பொன் என்பது ---------வகை உலோகங்கள்<br>1. ஆறு 2. ஐந்து 3. ஒன்பது 4. ஏழு | 1 | 2 | 3 | 4 |
| 27 | மிருகங்களின் தலைவன் என்பது -------------.<br>1. கரடி 2. முயல் 3. சிங்கம் 4. யானை | 1 | 2 | 3 | 4 |
| 28 | இன்பம் என்பதன் எதிர்ச்சொல் --------------.<br>1. உண்மை 2. செயற்கை 3. மகிழ்ச்சி 4. துன்பம் | 1 | 2 | 3 | 4 |
| 29 | மாலினி பூக்கள் ------------------ போனாள்.<br>1. படிக்கப் 2. பறிக்கப் 3. விளையாடப் 4. பாடப் | 1 | 2 | 3 | 4 |
| 30 | அவள் ---------- என்று சிரித்தாள்<br>1. சலசல 2. படபட 3. கடகட 4. கலகல | 1 | 2 | 3 | 4 |

( 30 புள்ளிகள்)

வினாக்கள் பகுதி 2 வருடம்: 03

1.பின்வரும் பந்தியை வாசித்து கேள்விகளுக்குப் பதில் எழுதுக.

இனியன் பேருந்து ஒன்றில் தன் ஊருக்குச் சென்றான். அவனது ஊரை அடைந்ததும் கீழே இறங்குவதற்காக தான் இருந்த இடத்தை விட்டு எழுந்தான். அவன் இருந்த இடத்தின் அருகில் ஒரு பை கிடந்தது. அதனை எடுத்துப் பார்த்தான். யாராவது தவற விட்டிருப்பார்கள் என சுற்றுமுற்றும் பார்த்தான். ஒருவரையும் அருகில் காணவில்லை. அந்தப் பையில் ஏதும் முகவரி இருக்கிறதா எனப்பார்த்தான். எதையும் காணவில்லை. அப்பொழுது அவன் ஆசிரியர் சொன்னது நினைவுக்கு வந்தது. பிறருடைய பொருட்களை எங்காவது கண்டால் அதை உரியவரிடம் ஒப்படைக்க வேண்டும். அல்லது காவல் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று. இனியன் அதனை எடுத்துக் கொண்டு அருகில் இருந்த காவல் நிலையத்திற்கு சென்று காவலரிடம் பையை கொடுத்து விபரங்களை கூறினான். காவலர் அவனது நேர்மையை மிகவும் பாராட்டினார்.

இனியன் எதில் தன் ஊருக்கு சென்றான்?

---

அவன் கீழே எதைக் கண்டான்.?

---

இனியன் அந்தப்பையின் மேலே எதைத் தேடினான்.?

---

அந்தப்பையை யாரிடம் கொண்டு சென்று கொடுத்தான்?

---

காவலர் அதற்கு என்ன செய்தார்?

---

(10 புள்ளிகள்)

2. சரியான சொற்களைத் தெரிவு செய்து கீறிட்ட இடங்களை நிரப்புக.

(பிடிக்க, சேர்ந்து, சென்ற, வாங்கிய, எழுதிய )

கண்ணன் மீன் ------- குளக்கரைக்கு சென்றான்.

அவன் கடையில்--------- பழங்களை பையில் போட்டான்.

நகரத்துக்குச் --------- பேருந்து வண்டியில் நான் ஏறினேன்.

ராமன் ---------- கட்டுரையை ஆசிரியர் வாசித்தார்.

அவள் எப்போதும் மற்றவர்களுடன் ---------- விளையாடுவாள்.

(10 புள்ளிகள்)

3. உமக்குப் பிடித்த ஆசிரியரைப் பற்றி 5 வசனங்கள் எழுதுக.

(10 புள்ளிகள்)

4. பின்வரும் வசனங்கள் மாறி இருக்கின்றன. அவற்றைக் கருத்துக்கமைய மாற்றி ஒழுங்குபடுத்தி எழுதுக.

அப்பொழுது மழை தூற தொடங்கியது.
சாந்தி கடைக்கு சென்றாள்.
அவளுடன் அவள் தம்பியும் சென்றான்.
வழியில் ஒரு பஸ்தரிப்பு நிலையத்தை கண்டார்கள்.
அதன் கீழ் ஒதுங்கிக் கொண்டார்கள்.

(10 புள்ளிகள்)

5. பின்வரும் படத்தைப் பற்றி நீர் விளங்கிக் கொள்வது என்ன.? அதைப்பற்றி ஐந்து வசனம் எழுதுக.




(10 புள்ளிகள்)

6. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து எழுதுக

(ஒரு, பற்று, அரசன், ஒன்று, உள்ளவன், வியாபாரம், சங்கிலிய, சண்டை, சூழ்ச்சி, மொழி, அரசுகள் )

இலங்கையில் முன் -------------------------காலத்தில் மூன்று அரசுகள் இருந்தன. அவற்றில் ---------யாழ்ப்பாண அரசு. இதன் கடைசி அரசன் சங்கிலியன். அவன் ஒரு சிறந்த ---------. அவன் மிகுந்த நாட்டுப் ----------- உடையவன் தமிழ் ---------- மீது மிகுந்த பற்று --------- போர்த்துக்கேயர் ---------- செய்ய இலங்கைக்கு வந்தனர். அதனை ----------- மன்னன் எதிர்த்தான். இருவருக்கும் இடையே ---------- மூண்டது. போர்த்துக்கேயர் முதலில் தோற்றனர். .கடைசியாக அவர்கள் ------------------- செய்து சங்கிலியனை வென்றனர். .

(10 புள்ளிகள்)

7. பின்வரும் சொற்களை சரியாக ஒழுங்கு செய்து வாக்கியமாக எழுதுக.

தம்பிக்கு - பிறந்தநாள் - இன்று

___________________________________________

.போனார்கள் - பள்ளிக்கு - அவர்கள்

___________________________________________

பறவை - சென்றது - உயரத்தில் - பறந்து

___________________________________________

வசிக்கின்றார் - சிட்னியில் - சித்தப்பா - என்

___________________________________________

மறையும் - மாலையில் - சூரியன்

___________________________________________

பாடுவோம் - தேவாரங்கள் - நாங்கள் - கோயிலில்

___________________________________________

தாய்மொழி - எங்கள் - தமிழ்.

___________________________________________

சென்றார்கள் - அவர்கள் - சுற்றுலா - இங்கிலாந்துக்கு

___________________________________________

பந்து - விளையாடினாள் - சிந்து - எறிந்து

___________________________________________

சிறந்த - புலவர் - திருவள்ளுவர் - ஒரு

___________________________________________

(10 புள்ளிகள்)